# சீர்காழி நகராட்சி



2019 –ம் ஆண்டு மே மாதம் 31.05.2019 திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரனக் கூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர் (ம) ஆணையர்
சீர்காழி நகராட்சி.

| | |
|---|---|
| பொ ருள் ண்-1 | சீர்காழி நகராட்சி – வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் நகர்புற ஏழைகள் விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு சிறப்பு நிதி உதவி வழங்குதல், சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு சிறப்பு நிதி உதவி ரூ.2000/– வழங்குவதற்கு நகரில் கணக்கெடுப்பு செய்வதற்கு 4 ஆயிரம் ( எண்கள்) படிவங்கள் அச்சடித்து விநியோகம் செய்திட அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 – ன் கீழ் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், 25A சுந்தரதாஷ் டேங் தெரு, திருச்சி – 08, என்ற நிறுவனத்தின் மூலம் படிவங்கள் பெறப்பட்டு பணியினை மேற்கொள்ள பணி ஆணை வழங்கி செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி<br>( ந.க.எண்.1642/2018/எச்.1)<br>நகர்மன்ற தீர்மான எண்–312 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது. |
| பொ ருள் ண்-2 | சீர்காழி நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவில் குப்பை அகற்றும் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் 3 TATA AC வாகனங்களுக்கு வீடுகளுக்கு நேரடியாக சென்று மக்கும் குப்பை , மக்காத குப்பை என பிரித்து வாங்குவதற்கு 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட Bin – கள் தேவைப்படுவதால் 3 TATA AC வாகனங்களுக்கு தேவையான மொத்தம் 20 Bin – கள் புதிதாக வாங்குவதற்கும் ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்காகும் தோராய செலவீனம் ரூ.40000 /– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1673/2019/எச்.1)<br>நகர்மன்ற தீர்மான எண்–313 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது. |
| பொ ருள் ண்-3 | இந்நகராட்சி 2019 – 20 ஆம் ஆண்டிற்கு ஆணையர் மற்றும் அலுவலக பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தமாக வெளியூர் சென்று வருவதற்கும் மற்றும் அலுவலக பணியாளர்கள் பணிமாறுதலில் வருவதற்கு மாறுதல் பயணப்படி மற்றும் தினப்படி வழங்க தோராய செலவினம் ரூ.150000 – ம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1648/2018/பி.2)<br>நகர்மன்ற தீர்மான எண்–314 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது. |

**பொருள் எண்-4**

இந்நகராட்சியின் I.U.D.M திட்டம் -2018-19 -ன்கீழ் வார்டு எண்-04 ஈசானியத் தெருவில் அமைந்துள்ள Compost Yard வடக்கு பகுதியில் 20KLD கொள்ளளவு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் Fecal Sludge Treatment Plant (FSTP) அமைக்கும் பணிக்கு ரூ.260.00 இலட்சத்திற்கு பணி செய்திட 04.04.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | ஆர். தனராஜ் ஒப்பந்ததாரர் சீர்காழி | ரூ.20995050.49 | ரூ.22028177.05 | (+) 4.92 % (அதிகம்) |
| 2 | ஆர். கலைவாணன் ஒப்பந்ததாரர் சீர்காழி | | ரூ.22143187.36 | (+) 5.47 % (அதிகம்) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஆர்.தனராஜ் ஒப்பந்ததாரர் ,சீர்காழி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (+) 4.92 % அதிகத்தில் குறைவாக உள்ளதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்–1/2019/இ1)
நகர்மன்ற தீர்மான எண்–315 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்-5**

தமிழ்நாடு நகராட்சி நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்கள் அலுவலகத்திற்கு 2018 – 2019 –ம் ஆண்டு ரூ.20000/– மற்றும் நிதி ஆண்டு 2019 – 2020 க்கும் ஆண்டு சந்த பங்கு தொகை செலுத்த வேண்டியுள்ளதால் உத்தேச மதிப்பு ரூ. 50000 /– ( ரூ ஐம்பது ஆயிரம் மட்டும் ) செலுத்த அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2473/2017/சி.1)
நகர்மன்ற தீர்மான எண்–316 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்-6**

சீர்காழி நகராட்சி கணினி பதிவு செய்யும் பணி சென்டிரலைஸ்டு செய்யப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. ஆதலால் கணினி பதிவுக்கு கூடுதலாக நேரமாகிறது . மேலும் கணினியில் புதிய கணக்கீட்டு முறை பதிவு, பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களிடமிருந்தும் மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களிடமிருந்து வரும் கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல்கள் ஆகியவற்றிற்கு உடனடியாக பதில் தரவேண்டி உள்ளதாலும் மேற்படி பணிகள் உடனுக்குடன் தாமத இன்றி செய்வதற்கு கணினி தெரிந்த இரண்டு நபர்களை முற்றிலும் தற்காலிகமாக ( தினக்கூலி அடிப்படையில் ) மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறைகளின் 2018 – 2019 ஆம் ஆண்டின் விலை விகிதப்படி 01.07.2019 முதல் 31.03.2020 வரை 9 மாத காலத்திற்கு நியமனம் செய்து கொள்வதற்கும் அதற்காகும் தோராய செலவின ரூ.2,04,054 / ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
நகர்மன்ற தீர்மான எண்–317 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்-7

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.50977/2018/டிபி3 நாள்.07.03.2019 –ல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 வெளியிடப்பட்டுள்ள நிலையில் விதி 23–ன் படி கீழ்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

1. பதிவு பெற்ற கட்டிட வடிவமைப்பாளர்கள் (Architects) 2. பொறியாளர்கள் (Engineers) 3. கட்டமைப்பு பொறியாளர்கள் (Structural Engineer) 4. கட்டிட அபிவிருத்தியாளர்கள் (Construction Engineer) 5. தரத் தணிக்கையாளர் (Quality Auditors) 6. நகரமைப்பு வல்லுனர் (Town Planner ) மற்றும் 7. அபிவிருத்தியாளர் (Developers) முதலான தொழில் சார்ந்த வல்லுநர்கள் மாநகராட்சி / நகராட்யில் பதிவு செய்வது சம்பந்தமாக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு செயல்படுத்தப்பட வேண்டும். “ மாநகராட்சி / நகராட்சிகளில் பதிவு பெற்ற வரைவாளர்கள் நியமனம் செய்து வருடத்தோறும் அல்லது 3 வருடங்கக்கு ஒருமுறை உரிமை புதுப்பிக்கும் நடைதுறை உள்ளது. மேற்காணும் உரிமம் மார்ச்–31 ல் முடிவடையும் என்பதால் மேற்காணும் உரிமக் காலம் முடியும் வரை மேற்படி நபர்களை வரைபடங்களில் கையொப்பமிட அனுமதிக்க வேண்டும்.’’
2. புதிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகளின்படி 01.04.2019 முதல் நகராட்சி நிர்வாக ஆணையரால் உருவாக்கப்படும் Screening Committee யில் சான்று பெற்ற நபர்களை மட்டுமே பதிவு செய்ய வேண்டும்.
3. இதற்கான Screening Committee குழு ஒன்றை கீழ்காணும் உறுப்பினர்களை கொண்டு அமைக்க உத்தரவிடப்படுகிறது.

## <u>மாநகராட்சிகள் / சிறப்புநிலை நகராட்சியில்</u>

| வ.எண் | உறுப்பினர்கள் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | செயற்பொறியாளர் (திட்டம் ) முதுநிலை நகரமைப்பு அலுவலர் | 1 |
| 2 | உதவி செயற்பொறியாளர் (திட்டம்) நகரமைப்பு ஆய்வர்கள் | 2 |
| 3 | உதவி ஆணையர்கள் | 3 |

## <u>நகராட்சிகள்</u>

| வ.எண் | உறுப்பினர்கள் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகராட்சி ஆணையர் | 1 |
| 2 | நகரமைப்பு அலுவலர் பொறியாளர் | 1 |

| | | |
|---|---|---|
| 3 | நகரமைப்பு ஆய்வாளர் | 1 |

4. பதிவு செய்ய கோரும் தொழில் சார்ந்த வல்லுனர்களுக்கான தகுதி பதிவு செய்யும் வழிமுறை அவர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ல் விதி 23 மற்றும் இணைப்பு XIII ல் குறிப்பிட்டவாறு இருக்க வேண்டும்.
5. தொழில் சார்ந்த வல்லுனர்கள் பதிவு செய்யும் போது உரிய அடையாள அட்டை / ஆளறிச் சான்று ஆதார் அட்டை மற்றும் புகைப்படத்துடன் பெற்று Online இணையதளம் வாயிலாக பதிவு செய்ய வேண்டும்.
6. பரிசோதனைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிடம் ரூ.5000/– (ஐந்து ஆயிரம்) மட்டும் பதிவுக் கட்டணமாக பெற்றுக் கொண்டு பதிவு செய்யலாம் பதிவு செய்யப்பட்ட தொழில் சார்ந்த வல்லுனர்களின் பதிவேடு பராமரிப்பதுடன்,விபரப் பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் புதுநிலைப்படத்தி ஏப்ரல் மாதத்தில் மன்றத்தின் பார்வைக்காக வைக்க வேண்டும் மற்றும் அலுவல் சார்ந்த வலை தளத்தில் பதிவிட வேண்டும்.
7. பதிவு செய்யப்பட்ட தொழில் சார்ந்த வல்லுனர்கள் தவறு செய்யும் நிலையில் உரிய விதிமுறைகளை பின்பற்றி அவர்களின் பதிவினை ரத்து செய்து. அதன் விபரத்தை மன்றத்தின் பார்வைக்கு வைப்பதோடு உள்ளாட்சி அலுவலக வலைதளத்திலும் பதிவிட வேண்டும்.

நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கு .

அலுவலக குறிப்பு. மன்றப்பொருள் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.709/2018/எப்.1)

**நகர்மன்ற தீர்மான எண்–318 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்-8

சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட 49, கைவிளாஞ்சேரி கிராமம் வார்டு "B" பிளாக் எண்.19 புல எண்.162/2 –ல் நகரளவை எண் 2.78 ஏக்கர் நிலத்தை சீர்காழி நகராட்சி அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தில் விரிவு அபிவிருத்தி திட்ட எண்.10–ல் விவசாய பகுதியாக நிலப்பயன்பாடு இருப்பதை குடியிருப்பு பகுதியாக நிலப்பயன்பாடு திட்ட மாற்றம் செய்து, வீட்டு மனைப்பிரிவு அமைக்க உத்தேசித்து, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.2196/2018/தம2 நாள்.24.07.2018 கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டதில், மேற்படி 1) புல எண்.162/2ல் மொத்தம் ஏ2.78 செண்டில் 0.66 செண்ட் (0.27ஏர்ஸ்) நஞ்சை நிலம் சீர்காழி பத்திரபதிவு அலுவலக பத்திர பதிவு எண்.3189/2015 நாள்.04.11.2015–ன் படி மனுதாரர் திரு க.சம்மந்தம் என்பவருக்கு சொந்தமாகவும் உள்ளது. 2) புல எண். 162/2 ல் மொத்தம் 0.66 செண்ட் (0.27.0 ஏர்ஸ்) நிலம் சீர்காழி பத்திர பதிவு அலுவலக பத்திர பதிவு எண்.3188/2015 நாள்.04.11.2015–ன் படி மனுதாரர் திருமதி ச.வள்ளியம்மை என்பவருக்கு சொந்தமாக உள்ளது. 3) புல எண்.162/2 ல் மொத்தம் ஏ2.78 செண்டில் 0.78 செண்ட் நிலம் சீர்காழி பத்திர பதிவு அலுவலகம் பத்திர பதிவு எண்.3191/2015 நாள்.04.11.2015–ன்படி மனுதாரர் திரு ச.மணிகண்டன் என்பவருக்கு சொந்தமானதாக உள்ளது. 4) புல எண்.162/2–ல் மொத்தம் ஏ.2.78செண்ட் 0.66 செண்டு (0.27.0 ஏர்ஸ்) நிலம் சீர்காழி பத்திர பதிவு அலுவலக பத்திர பதிவு எண்.3190/2015 நாள்.04.11.2015–ன் படி மனுதாரர் திரு ச.சண்முகநாதன்

என்பவருக்கு சொந்தமானதாக உள்ளது.

2) மேற்படி நிலம் பயன்பாடு மாற்றம் கோரும் புல எண்ணில் உள்ள நிலங்களை மனுதாரர்களுக்கு சொந்தமானது என்பதற்கான பட்டா நகல்கள் ஆகியன சமர்பித்துள்ளார்கள்.மேற்படி புல எண்ணிற்கான பத்திரபதிவு துறை வில்லங்க சான்று சமர்பித்துள்ளார்கள். மேலும் மேற்படி நிலம் பயன்பாடு மாற்றம் கோரும் புல எண்ணில் உள்ள நிலங்களின் மனுதாரர்கள் மனைப்பிரிவு அமைக்க சட்ட பூர்வமான உரிமை உள்ளவர்கள் என சீர்காழி நகராட்சி நிலை வழக்கறிஞர் தனித்தனியே சட்ட கருத்துறை வழங்கியுள்ளார்.

மனுதாரர்கள் நில பயன்பாடு கோரும் புல எண்களின் நகரளவை பதிவேடு நகல், நகரளவை வரைபடம், சிட்டா அடங்கல் நகல் நிலப்பயன் மாற்றம் கோரும் வரைபடம் மற்றும் சுற்றுசார்பு வரைபடம் ஆகியன சமர்பித்துள்ளார்.

3) மேற்படி நிலம் பயன்பாடு மாற்றம் கோரும் புல எண் உள்ள நிலத்தில் சீர்காழி வட்டாட்சியர் அவர்களின் கடித மூ.வ.352/2018/அ.1 நாள். 31.01.2018 ம் தேதிய கடிதத்தின் வாயிலாக மேற்படி புல எண்.162/2ல் அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை எனவும், நிலம் கையகப்படுத்தும் சட்டம், நில சீர்திருத்த சட்டம், நில உச்சவரம்பு சட்டம் ஏதும் பாதிப்பு இல்லை எனவும், மேலும் வெள்ளதால் பாதிப்பு ஏதும் ஏற்படாத பகுதியாக உள்ளது எனவும் தெரிவித்து மேற்படி புல எண்ணில் உள்ள இடத்தை நிலப்பயன் மாற்றம் செய்ய தடை ஏதுமில்லை, என தடையின்மை சான்று வழங்கியுள்ளார்கள்.

4) மேலும் நிலபயன்பாடு மாற்றம் செய்ய கோரப்பட்டுள்ள புல எண்ணிற்கு அணுகு சாலையில் கழுமலை வாய்க்கால் மீது அமைந்துள்ள பாலம் தொடர்பான பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறையிடமிருந்து க.எண்.1536/உ.செ.பொ./2019 நாள்.27.02.2019 உதவிசெயற்பொறியாளர், பொபது – நீ.ஆது காவிரி உட்கோட்டம் சீர்காழி அவர்களிடமிருந்து உறுதி தன்மை சான்று மற்றும் நிலபயன் மாற்றம் செய்திட தடை எதுமில்லை என சான்று வழங்கப்பட்டுள்ளது.

5) மேற்படி நிலப்பயன் மாற்றம் கோரப்பட்ட இடத்தை விவசாய பகுதி நிலபயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்வது தொடர்பாக ஆட்சேபனை / ஆலோசனை கோரி 30.01.2019 அன்று தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. 30 தினங்கள் வரை பொதுமக்கள் இடம் இருந்து சீர்காழி நகராட்சிக்கு எந்தவித ஆட்சேபனைகள் / ஆலோசனைகள் வரவில்லை.

எனவே மனுதாரர்களின் நிலபயன் மாற்றம் கோரும் கருத்துரு உள்ளூர் திட்டக்குழும அனுமதி பெற்று மேல் நடவக்கைக்காக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1290/2018/எப்.1)

நகர்மன்ற தீர்மான எண்–319 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்-9

சீர்காழி நகராட்சி – வறட்சி நிவாரண நிதி திட்டம் 2019-20 (SDRF–2019) ன்கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் - 125 நாள் - 28.05.2019 ன் படி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்வாவூர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து வறட்சி காலம் ஆதலால் பொது மக்களின் நலன் கருதி நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் அவர்களின் அறிவுறையின் படி கீழ் கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|

| | | இலட்சத்தில் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | சீர்காழி நகராட்சி வார்டு எண்–22 துரையூர், வார்டு எண்–22 பனமங்களம், வார்டு எண்–23 கோவில்பத்து, வார்டு எண்–11 நகராட்சி அலுவலக வளாகம், வார்டு எண்–01 புளிச்சக்காடு மற்றும் வார்டு எண்–22 பனமங்களம் வடக்கு தெரு ஆகிய இடங்களில் உள்ள ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்யும் பணி. | 1.00 |
| 2 | சித்தமல்லி தலைமை நீரேற்றும் நிலையத்தில் கொள்ளிடம் ஆற்றில் உள்ள ஆழ்துளை கிணறு எண்–1 யை பராமரிப்பு செய்யும் பணி. | 10.00 |
| 3 | சித்தமல்லி தலைமை நீரேற்றும் நிலையத்தில் கொள்ளிடம் ஆற்றில் உள்ள ஆழ்துளை கிணறு எண்–2 யை பராமரிப்பு செய்யும் பணி. | 10.00 |
| 4 | சித்தமல்லி தலைமை நீரேற்றும் நிலையத்தில் கொள்ளிடம் ஆற்றில் உள்ள ஆழ்துளை கிணறு எண்–3 யை பராமரிப்பு செய்யும் பணி. | 10.00 |
| 5 | சித்தமல்லி தலைமை நீரேற்றும் நிலையத்தில் கொள்ளிடம் ஆற்றில் உள்ள திறந்த வெளி கிணற்றை தூர்வாரும் பணி. | 10.00 |
| 6 | சீர்காழி நகராட்சி வார்டு எண்–3 கீழமாரியம்மன் கோவில் தெரு, வார்டு எண்–16 மொன்னையன் மேட்டு தெரு, வார்டு எண்–05 குமரன் கோவில் மேல தெரு, வார்டு எண்–11 பாரதிதாசன் தெரு மற்றும் வார்டு எண்–10 அய்யனார் கோவில் தெரு ஆகிய இடங்களில் உள்ள சிறு மின் விசை பம்புகளை பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்யும் பணி. | 5.00 |

மேற்படி பணிகள் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

நகர்மன்ற தீர்மான எண்–320 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்-10

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பெறப்பட்டு நகராட்சி அலுவலகத்திலுள்ள 12.00 இலட்சம் லிட்டர் மற்றும் வ.உ.சி நகரில் உள்ள 2.00 இலட்சம் மேல்நிலை தொட்டி மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கோவில்பத்து, பனமங்கலம் மற்றும் துறையூர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள 30000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மின் மோட்டார்களை இயக்கவும் அப்பகுதியில் உள்ள குளோரினேஷன்பிளாண்டினை இயக்கவும் இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததாலும், மேலும் குடிநீர் திட்ட பணியாளர் ஒருவர் வயது மூப்பு காரணமாக ஒய்வு பெற்றதாலும் மேட்டார் இயக்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறையில் ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr,No.539/2005/F.3 நாள்,28.1.2005–ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி பொதுப்பணிதுறை விலை விகித்தின்படி Electrician Grade-II நிலையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏற்கனவே நியமிக்கப்பட்ட பணியாளர்களுக்கு 30.06.2019 ஒப்பந்த நாள் முடிவடையும் நிலையில் உள்ளதால், 01.08.2019 முதல் 30.04.2020 வரை 9 மாதங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தற்போது உள்ள 2018–19 பொதுப்பணித் துறை விலை விகிதத்தில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.537.00 வீதம் நான்கு நபர்கள் கொண்டு பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 5,80,000/– ஐ இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

நகர்மன்ற தீர்மான எண்–321 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பொருள் எண்-11 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் நிர்வாக அனுமதியின் படி சீர்காழி நகராட்சி வார்டு எண்-21 சாய்பாபா கார்டனில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டம்–2018–19 ன் கீழ் நுண்உரம் செயலாக்க மையம் (Micro Compost Centre) ரூ.76.00 இலட்சத்திற்கு வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண்–222 நாள்–18.06.2018 ன் படி அனுமதிவழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் பணி மேற்கொள்ள ஆயத்த பணிகள் மேற்கொள்ளும் போது அப்பகுதி பொது மக்களால் 20.12.2018 அன்று சாய்பாபா கார்டனில் நுண்உரம் செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக அந்த இடத்தில் பணி மேற்கொள்ள இயலாத சூழ்நிலையினை தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் நாகப்பட்டினம் அவர்களின் அறிவுரையின்படி சீர்காழி வட்டாச்சியர் அவர்கள் முன்னிலையில் அமைதி பேச்சுவார்த்தை கூட்டம் 22.12.2018 அன்று நடத்தப்பட்டதில் சாய்பாபா கார்டனுக்கு பதிலாக மாற்று இடம் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டதின்படி தென்பாதி வார்டு எண்–20 ல் உள்ள நகர அளவை எண்–29/1,29/2, வார்டு–B, பிளாக்–13 ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான மயானத்தில் நுண்உரம் செயலாக்க மையத்தினை இடமாற்றம் செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் பின்னேற்பு வழங்க வேண்டி இந்நகர் மன்ற தீர்மான எண்.288 நாள்–11.01.2019 ல் அனுமதிக்கப்பட்டு தெரிவிக்கப்பட்டது அதன் படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்–22866/தி3/2018 ன் படி மேற்படி பணி இடமாற்றத்தை அனுமதித்து பின்னேற்பு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1190/2018/இ1)<br>நகர்மன்ற தீர்மான எண்–322 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-12 | இந்நகராட்சியில் துப்புரவு அலுவலராக பணிபுரிந்து 31.07.2000 ல் ஒய்வு பெற்ற திரு.டி.வி.சிங்கார வடிவேலு என்பவர் வீடுகட்டுவதற்காக நகராட்சி நிர்வாக ஆணையரகம் முகாம் கடன் பெற்ற தொகையினை திரும்ப அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு தவணைத் தொகையாக அரசு கணக்கில் செலுத்திய விவரங்களை தெரிவிக்க கோரியும் வீட்டு பத்திரத்தை திரும்ப வழங்கவும் சீர்காழி நகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தை எதிர்த்தும் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.8299/2010 ல் வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே மேற்படி வழக்கினை எதிர்த்து நகராட்சி சார்பாக வழக்கினை தொடர சென்னை உயர்நீதி மன்ற கூடுதல் அரசு வழக்கறிஞர் திருமதி.K.புவனேஸ்வரி அவர்கள் மூலம் மேற்படி வழக்கினை நடத்தவும் அதற்கான வழங்கறிஞர் கட்டணம் ரூ.15000 / – உத்தேச செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 2916/2018/பி.2)<br>நகர்மன்ற தீர்மான எண்–323 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-13 | இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து 30.09.2006 ல் ஒய்வு பெற்ற திரு.சி.ஆறுமுகம் என்பவர் கிராம முன்சிபாக பணியாற்றிய நாட்களை ஒய்வூதியத்தில் சேர்க்ககோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.13588/2015 வழக்கு தொடர்ந்துள்ளார் அவ்வழக்கினை தொடர்ந்து. சென்னை உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பாணை வெளியிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7815/2018/ஜே3 நாள்.17.07.2018 ன் படி தனியரது வழக்கின் தீர்ப்பாணையை எதிர்த்து வழக்கு தொடர திரு.கே.ராமகிருஷ்ணன் அரசு வழக்கறிஞர் அவர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்கறிஞர் கட்டணமாக உத்தேசமாக ரூ.15000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 5223/2013/பி.2)<br>நகர்மன்ற தீர்மான எண்–324 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| பொருள் ண்-14 | 2018–2019 ஆம் ஆண்டிற்கான சொத்துவரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் வரியில்லா இனங்கள் நிலுவை மற்றும் நடப்பு மெதாகையினை வரி வதிப்பாளர்கள் செலுத்திட கோரி ஆட்டோவுடன் கூடிய ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்திட தனி அலுவலர் முன் அனுமதி 13.12.2018 அன்று பெறப்பட்டு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் பெற 20.01.2019 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டதில் 27.01.2019 அன்று கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1) லெட்சுமி ஆடியோஸ், சீர்காழி – ரூ.1800/–<br>2) ஜெயந்தி ஆடியோ சர்வீஸ், சீர்பாழி – ரூ.1500/–<br>ஆகிய நிறுவனங்களிடம் இருந்து வரப்பெற்றுள்ளன, இதில் குறைவாக விலைப்புள்ளிகள் ஜெயந்தி ஆட்டோ சீர்காழி, அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. இதற்கான விலைப்பட்டியல் ரூ.39*1500=58,500/– தொகை வழங்க கோரி 04.04.2019 அன்று வரப்பெற்றுள்ளது. விளம்பரம் செய்ததற்கான சான்று வருவாய் ஆய்வாளர் அவர்களால் 08.04.2019 அன்று வழங்கப்பட்டுள்ளது. எனவே இத்தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும், தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–62/2019/அ.1)<br>நகர்மன்ற தீர்மான எண்–325 நாள்.31.05.2019. அனுமதிக்கப்படுகிறது. |

(ஒம்) . திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–31.05.2019

/உண்மை நகல்/

ஆணையர்
சீர்காழி ந கராட்சி.